DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII Code of Criminal Procedure)

---

IN THE COURT OF IV ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, MADURAI

**S.C. No.740/2024**

**P.W.3**

DEPOSITION OF WITNESS FOR PROSECUTION DEFENCE COURT

| | | |
|---|---|---|
| NAME | : | பிரபாகரன் |
| Father Name | : | ஜெயராஜ் |
| VILLAGE | : | |
| CALLING | : | |
| AGE | : | 34 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 01.12.2025.

( 1 மற்றும் 2 எதிரிகள் ஆஜர்.)

**<u>அரசு தரப்பில் முதல் விசாரணை :</u>**

நான் தற்போது சி5 கரிமேடு காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். சம்பவம் அன்று சி3 எஸ் எஸ் காலனி காவல்நிலையத்தில் முதல்நிலை காவலராக பணிபுரிந்து வந்தேன். 15.07.2024ம் தேதி சார்பு ஆய்வாளர் **சாட்சி எண்.6** திலீபன் அவர்களும், முதல்நிலை காவலர் **அ.சா.2** செந்தில் குமார் மற்றும் தலைமை காவலர் **அ.சா.1** வினோத்குமார் 2681 மற்றும் நானும் தேனி ரோடு தாலுகா அலுவலகம் அருகே வாகன சோதனை செய்யும் போது, பதிவு எண்.TN 58 X 4209 என்ற வாகனத்தில் வந்தவர்களை மறித்த போது, அவர்கள் வண்டி திருப்பி செல்ல முற்பட்டார்கள். அவர்களை மடக்கி பிடித்து அவர்களை விசாரணை செய்ததில் 1வது எதிரி சக்திவேல்,த/பெ. மதுரை பாண்டி என்றும், 2வது பாரதி த/பெ. கார்த்திகேயன் என்றும் தெரிவித்தனர். மேற்படி வாகனத்தை சோதனை செய்த போது, நான்கு வெள்ளை மூட்டைகள் இருந்தது. அதை என்னவென்று பிரித்து பார்த்த போது, அதில் கணேஷ் புகையிலை இருந்தது. மேற்படி புகையிலையை வாசனை செய்து பார்க்கும் போது மதிமயக்கும் வாடை வந்தது. மேலும் அந்த வாசனை தலைவலி மற்றும் வாந்தி ஏற்படும் விதம் இருந்தது. பின்னர் எதிரிகளை விசாரணை

செய்தபோது 1வது எதிரி சக்திவேல் என்பவர் 15.07.2024ம் தேதியன்று பெங்களூர் சென்று அங்கு இனம் தெரியாத நபரிடம் இப்பொருளை வாங்கி மதுரை எல்லீஸ் நகரிலுள்ள DTDC கொரியரில் அனுப்பி அந்த கொரியரிலிருந்து எதிரிகள் பெற்று செல்லம்பட்டி செல்வதாக 1வது எதிரி ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார்.அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் 2வது கையொப்பம் என்னுடையது தான் அந்த கையொப்பம் **அ.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதுபோல் அத்தாட்சியில் கண்டுள்ள 2வது கையொப்பம் என்னுடையது தான் அந்த கையொப்பம் **அ.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு காலை 07.45 மணிக்கு எதிரிகளை சார்பு ஆய்வாளர் அவர்கள் கைது செய்தோம். என்னை சார்பு ஆய்வாளர் விசாரணை செய்தார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :–**

எனக்கு காவல்துறையில் 15 வருட அனுபவம் உள்ளது. எனக்கு வாகன தணிக்கை மற்றும் பந்தபஸ்து பணிகளில் அனுபவம் உள்ளது. எனக்கு அன்றாட பணிகள் சம்மந்தமாக பாக்கெட் டைரி உள்ளது என்றால் சரிதான். அந்த பாக்கெட் டைரியை அன்றாட பணி முடித்து ஆய்வாளரிடமோ அல்லது சார்பு ஆய்வாளரிடமோ தினமும் கையொப்பம் பெற வேண்டும் என்றால் சரிதான். இந்த வழக்கு சம்மந்தப்பட்ட ரோந்து பணி சம்மந்தமாக என்னுடைய பாக்கெட்டைரியில் குறித்து வைத்துள்ளேன். அதனை என்னுடைய விசாரணையின் போது சார்பு ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன். நான் எஸ் எஸ் காலனி காவல்நிலையத்தில் தனிபடை போலீஸார் என்றால், சரியல்ல. சம்பவ நடந்ததாக சொல்லபடும் இடத்தின் அருகே உள்ள தாலுகா அலுவகத்தின் வாசலில் கண்காணிப்பு கேமரா உள்ளது என்றால் எனக்கு ஞாபகமில்லை. சம்பவம் நடந்ததாக சொல்லபடும் இடத்தில் தனிநபர் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. கைப்பற்றபட்டதாக சொல்லப்படும் சான்றுபொருட்களில் இருந்து இரசாயன பகுப்பாய்விற்கு மாதிரி எதுவும் சார்பு ஆய்வாளர் எடுக்கவில்லை. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் 200 மீட்டர் தொலைவில் தான் எஸ் எஸ் காலனி காவல்நிலைய வாகன சோதனை

சாவடி உள்ளது என்றால், சரிதான். செல்லம்பட்டியில் இருந்து நாகமலைபுதுக்கோட்டையில் இருந்து வரும் வாகனம் மேற்படி சோதனை சாவடியை தாண்டி தான் வரும் என்றால் சரிதான். மேற்படி வந்து செல்லும் வாகனங்கள் எங்கள் சோதனை சாவடி கேமராவில் பதிவாகி இருக்கும் என்றால் சரிதான். ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் ஒரு கையொப்பம் ஒரு பேனாவினாலும், மற்றொரு கையொப்பம் இன்னொரு பேனாவினாலும் போடப்பட்டது என்றால் சரிதான். கைப்பற்றபட்டதாக சொல்லப்படும் பொருட்கள் அடங்கிய மூட்டைகளில் போலீஸ் பட்டன்சீல் வைக்கப்பட்டதா என்றால் எனக்கு ஞாபகமில்லை. நான் சொன்ன நேரத்தில், சொன்ன விததில் எவ்விதமான வாகன சோதனையிலும் ஈடுபடவில்லை என்றும் உயர் அதிகாரிகளின் வேண்டுதலுக்கிணங்க ஆவணங்கள் அனைத்தும் காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிகளுக்கு எந்த சம்மந்தமில்லை என்றால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதி 15.07.2024 என்று முதல்விசாரணையில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்.

**<u>மறு விசாரணை –</u>** இல்லை.

S/d - S.John Sundarlal Suresh, B.Sc., M.L.,
IV Additional District and Sessions Judge, Madurai.